

# அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
# ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் :154/2016
தேதி. : 04/10/2016

## காவிரி நதிநீர் விவகாரத்தில்
## தமிழ்நாட்டை மத்திய அரசும் வஞ்சிக்கிறது
## ச.ம.க நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க மத்திய அரசு எதிர்ப்பு தெரிவித்திருப்பது மட்டுமல்லாமல் உச்ச நீதிமன்றத்திற்கு மேலாண்மை வாரியம் அமைக்க உத்தரவிட முடியாது என்று நீதிமன்றத்தில் கூறியிருப்பது மிகுந்த வேதனை அளிக்கிறது. இது தமிழகத்தையும் தமிழக விவசாயிகளையும் வஞ்சிக்கும் செயலாகும். மத்திய அரசின் இந்த நிலைப்பாடு தமிழகத்தின் அனைத்து தரப்பு மக்களுக்கும் ஏமாற்றம் அளிக்கிறது.

உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை மீறி மத்திய அரசு எடுத்திருக்கும் இந்த முடிவு, ஒரு தவறான முன்னுதாரணமாகும். தமிழகம் - கர்நாடகா போன்ற மாநிலங்களுக்கிடையே இருக்கும் தீராத பிரச்னைக்கு மத்திய அரசு ஒரு நடுநிலை மேலாண்மை வாரியம் மூலம் மட்டுமே ஒரு நியாயமான தீர்வு காணமுடியும் என்பதை கருத்தில் கொண்டு உச்ச நீதிமன்றம் வெளியிட்டு இருக்கும் இந்த உத்தரவை மீறுவது, மேலும் வாரியம் அமைப்பதற்கு பாராளுமன்றத்தில் விவாதித்து தனிச்சட்டம் கொண்டுவரவேண்டும் என்று கூறுவது, மேலும் இந்த பிரச்னையை நீடிப்பதற்கே வழிகோள்கிறது

இரு மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் விவகாரத்தை தீர்ப்பதற்கு சட்ட விதிகள் மூலமாகத்தான் செயல்முறை படுத்தவேண்டும் என்று தற்போது எடுத்து சொல்லியிருக்கும் மத்திய அரசு, உச்சநீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தவுடன், ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் நதிநீர் மேலாண்மை வாரியங்களை முன்னுதாரணமாக வைத்து உடனடியாக அதற்குரிய துரித நடவடிக்கைகளை எடுத்து மேலாண்மை வாரியம் அமைக்க ஏற்பாடு செய்திருக்கலாம். கொடுக்கப் பட்ட கால அவகாசம் முடியும் தருவாயில் தற்போது இந்த மனுவை சமர்பித்திருப்பது விவசாயிகளின் வாழ்வாதாரத்தை முடக்கி, அவர்கள் விவசாயத்தின் மேல் நம்பிக்கை இழக்க செய்யும் செயலாகும்

தமிழக விவசாயிகளின் அடிப்படை தேவையை மனதில் கொண்டு, மோடி தலைமையிலான மத்திய அரசு இந்த பிரச்சனை எந்த அரசியல் குறுக்கீடும் இன்றி உடனடியாக தீர்த்து வைக்கவேண்டும் என்று என் சார்பிலும் சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் தமிழக மக்கள் சார்பிலும் வேண்டுகோள் விடுக்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,



**ஆர்.சரத்குமார்** B.Sc.
நிறுவனத் தலைவர்